செய்தி வெளியீடு எண்.78 நாள்.04.02.2017

பத்திரிக்கை செய்தி

**அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், அம்பத்தூர், சென்னை -98 பண்டகத்தில் உள்ள உலோக கழிவுகளை "உள்ளது உள்ளப்படியே"/ கிலோ என்ற நிலையில் 10.02.2017 பொது ஏலத்தில் விடப்படும் என மாவட்ட ஆட்சியர் திருமதி.எ. சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

------------

அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், அம்பத்தூர், சென்னை -98 பண்டகத்தில் உள்ள உலோக கழிவுகளை **"உள்ளது உள்ளப்படியே"**/ கிலோ என்ற நிலையில் 10.02.2017 அன்று காலை 11.00 மணியளவில் பொது ஏலத்தில் விடப்படும். ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் கீழே குறிப்பிட்டுள்ள ஏல விதிகளுக்குட்பட்டு கலந்துக் கொள்ளலாம்.

**ஏல விதிமுறைகள்**

1. உள்ளது உள்ளபடியே / கிலோ என்ற முறையில் இப்பயிற்சி நிலையத்திலுள்ள இணைப்பில் உள்ள உலோக கழிவுகளை ஏலம் கேட்க விரும்புவோர் முன்பணமாக ரூ.10,000/- வங்கி வரையோலையாக செலுத்த வேண்டும் (In Favour of Administrative Officer, Govt. ITI, Ambattur, Chennai – 98, Payable at SBI Ambattur). ஏலம் முடிந்தவுடன் அதிக தொகைக்கு ஏலம் எடுத்தவரைத் தவிர்த்து மீதம் உள்ளவர்களுக்கு வரையோலையாக திருப்பித் தரப்படும்.

2. ஏலத்தில் பங்குபெற விரும்புபவர்கள் உலோகக் கழிவு பொருட்களுக்கான அதிகபட்ச விலையினை மூடி முத்திரையிடப்பட்ட உறையில் உரிய படிவத்தினை அலுவலகத்தில் பெற்று உரிய பிணையத் தொகையுடன் அளிக்க வேண்டும்.

3. மூடி முத்திரையிடப்பட்ட உறையில் 10.02.2017 அன்று காலை 10.00 மணிக்கு அளிக்கப்பட வேண்டும். ஏலம் நடக்கும் போது கண்டிப்பாக வருகை தர வேண்டும்.

4. உள்ளது உள்ளபடியே / கிலோ என்ற முறையில் ஏலம் விடும் உலோக கழிவுகளை யார் அதிகம் ஏலத்தொகை கோருகிறார்களோ மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட விலைப் புள்ளியில் அதிக தொகை குறிப்பிட்டுள்ளனரோ அதில் அதிகம் உள்ள தொகைக்கு ஏலம் அங்கீகாரம் செய்யப்படும்.

5. ஏலம் விடப்படும் உலோக கழிவுகளை ஏலம் விடும் முன்னரே அனைத்து அலுவலக நாட்களில் முற்பகல் 12.00 முதல் 2.00 மணி வரை பார்வையிட அனுமதிக்கப்படும். நேரில் வந்து உரிய படிவத்தினை பெற்று பூர்த்தி செய்து 10.02.17 அன்று காலை 10.00 மணிக்குள் அளிக்கப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்